செ.வெ.எண்:105 நாள்: 21.02.2018

# நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை இயக்கத்தின் கீழ் வேளாண் விளை பொருட்களின் மதிப்புக் கூட்டும் இயந்திர மையங்கள் அமைக்க உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் அழைப்பு

மானாவாரி நிலங்களை மேம்படுத்தி வேளாண் உற்பத்தியினை பெருக்குவதற்காக நீடித்த நிலையான மானாவாரி வேளாண்மை இயக்கம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி மாவட்டத்தில் 2016-2017-ம் நிதியாண்டில் முதற்கட்டமாக ஒரு தொகுப்புக்கு ஆயிரம் ஹெக்டேர் வீதம் 5 மானாவாரி தொகுப்புகள் தேர்வு செய்யப்பட்டு, 5000 ஹெக்டேர் மானாவாரி நிலத்தில் மேம்பாட்டுப் பணிகள் ரூ.2.15 கோடியில் செயலாக்கப்பட்டுள்ளது. மானாவாரி தொகுப்புகளில் உள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அல்லது கூட்டுப் பண்ணை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு அந்த தொகுதிகளில் விளையும் விளைபொருட்களை மதிப்பு கூட்டும் வகைக்கு மதிப்புக்கூட்டும் இயந்திரங்களுக்கான மையம் அமைக்க மானியம் வழங்கப்பட உள்ளது.

வேளாண் விளைப் பொருட்களை சுத்தப்படுத்தி, தரம் பிரித்து விற்பனைக்கு ஏற்ற வகையில் பேக்கிங் செய்தல் உள்ளிட்ட பணிகளுக்கான மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வாங்குவதற்கும் மற்றும் அதற்குரிய பணி மூலதனம் ஆகியவை உள்ளிட்ட மொத்த தொகையில் 75 சதவீதம் அல்லது ரூ 10 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை அரசு மானியமாக வழங்கப்படும். மீதி 25 சதவீத தொகையினை உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் உழவர் உற்பத்தி குழு செலுத்த வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட குழு மதிப்பு கூட்டும் இயந்திரங்களை நிறுவுவதற்கும் உரிய இடவசதி, மின்சார இணைப்பு இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். தொகுப்புகளில் ஏதாவது அரசு கட்டிடங்கள், தேர்வான இட வசதியுடன் இருந்தால் வட்டார மேம்பாட்டு குழுவின் ஒத்துழைப்புடன் மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரை பெறப்பட்டு கட்டிடத்தின் வாடகைத் தொகையினை செலுத்தி, அவ்விடத்திலும் அமைத்துக் கொள்ளலாம்.

மதிப்பு கூட்டுதலுக்கான அனைத்து நிலைகளுக்கும் தேவையான அனைத்து தானியங்களை சுத்தப்படுத்துதல் முதல் பேக்கிங் வரைக்கும் தேவைப்படும் அனைத்து இயந்திரங்களையும் ஒரு தொகுப்பாக வாங்கி சிறிய தொழில் மையம் அமைக்கலாம்.

மேலும் ஒன்றுக்கும் மேற்பட்ட தொகுப்பில் உள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழு சேர்ந்து பெரிய அளவிலான மதிப்பு கூட்டும் இயந்திர மையங்கள் ரூ.10 இலட்சத்திற்கும் அதிகமான தொகையிலும் அமைக்கலாம். வேளாண் பொறியியல் துறையினால் விலை நிர்ணயம் செய்து அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து இயந்திரங்கள் வாங்கப்பட வேண்டும்.

மதிப்பு கூட்டும் இயந்திர மையம் அமைப்பதற்கு ஆர்வமுள்ள உழவர் உற்பத்தியார் அமைப்பு அல்லது உழவர் உற்பத்தியாளர் குழு தேர்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட மானாவாரி தொகுப்பு மேம்பாட்டு குழுவிற்கு வழங்கப்படும் தொகுப்பு மேம்பாட்டுக்குழு, விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் சம்மந்தப்பட்ட வேளாண்மைப் பொறியியல் துறை, உதவி செயற் பொறியாளருக்கு பரிந்துரை செய்ய வேண்டும்.

விண்ணப்பித்துள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுக்கான தேவையான கட்டமைப்புகள், தேவைப்படும் இயந்திர விபரங்கள் மற்றும் ஆவணங்களை உதவி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை சரிபார்த்த பின்னர் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவின் ஒப்புதல் பெறப்படும். பின்னர், வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்ட நிறுவனங்களுக்கு உதவி செயற் பொறியாளர் அவர்களால் மதிப்புக் கூட்டும் இயந்திரங்கள் வழங்கிட பணி ஆணை வழங்கப்படும். இயந்திரங்கள் வழங்கப்பட்டு, மதிப்புக் கூட்டும் இயந்திர மையம் அமைக்கப்பட்டபின் உதவி செயற் பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு இயந்திரங்கள் திருப்திகரமாக செயல்படுகிறது என்ற அறிக்கையினை உழவர் உற்பத்தியாளர் அமைப்பு அல்லது உழவர் உற்பத்தியாளர் குழுவிடமிருந்து பெற்று நிறுவனங்களுக்கு தொகுப்பு மேம்பாட்டுக் குழுவின் மூலம் மானியத் தொகை விடுவிக்கப்படும்.

எனவே, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆர்வமுள்ள உழவர் உற்பத்தியாளர் அமைப்பு மற்றும் உழவர் உற்பத்தியாளர் குழு தங்கள் விண்ணப்பத்தினை தொகுப்பு மேம்பாட்டு குழுவிற்கு அளித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு செயற் பொறியாளர்(வேளாண்மைப் பொறியியல் துறை) திருநெல்வேலி உதவி செயற் பொறியாளர்(வேளாண்மைப் பொறியியல் துறை) திருநெல்வேலி மற்றும் உதவி செயற் பொறியாளர்(வேளாண்மைப் பொறியியல் துறை) தென்காசி ஆகியோரை தொடர்பு கொண்டு பயன் பெற திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி